# மெட்ரோ ரயில் சேவை நேரம் இன்று நீட்டிப்பு

**சென்னை, அக்.28:** பொதுமக்களின் வசதிக்காக, மெட்ரோ ரயில் சேவை நேரம் வியாழக்கிழமை (அக்.29) மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் சேவை வியாழக்கிழமை (அக்.29) மட்டும் காலை 7 மணி முதல் இரவு 11 மணி வரை நீட்டிக்கப்படவுள்ளது. இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் செய்திக்குறிப்பு:

தொடர் விடுமுறை காரணமாக, வியாழக்கிழமை மட்டும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும் மெட்ரோ ரயில் சேவைகள் இரவு 11 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீலாது நபியை முன்னிட்டு, வரும் வெள்ளிக்கிழமை அன்று அரசு விடுமுறை நாள் ஆகும் . எனவே, சொந்த ஊர்களுக்குச் செல்லும் பொதுமக்களின் வசதியாக, சென்னை மெட்ரோ ரயில் சேவை நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது.